بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்**

September 20 2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப்**

# ஆன்மீக முன்னேற்றத்தின் சாராம்சம்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நபரும் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டும். அவ்வாறு அல்லாஹ்வுக்கு அஞ்சுவது அவரை பல்வேறு நன்மைகளுக்கு வாரிசாக்கும். மேலும் கூறுகின்றார்கள்: அசல் விசயம் என்னவென்றால், அல்லாஹ்வின் தீர்ப்பின்படி நல்லவராகவும் நேர்மையாளராகவும் வெளிப்படுபவரே உண்மையில் நல்லவரும் நேர்மையளரும் ஆவார். தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டே இருக்கக்கூடிய பலர் உள்ளனர். அவர்கள் தன்னை இறையச்சமுடையோர் எனக் கருதுகின்றனர். அல்லாஹ்வின் பதிவேட்டில் எவருடைய பெயர் முத்தக்கி என்று உள்ளதோ உண்மையில் அவர் தான் முத்தக்கி ஆவார். இதுதான் அந்த முக்கியமான அறிவுரை ஆகும்.

இது நமது முன்னால் இருக்கும் என்றால் பிறகு நாம் அல்லாஹ்வின் உரிமைகளைச் செலுத்துபவர்களாகவும், அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாகவும் ஆக முடியும். ஆனால் நாம் நமது சிந்தனையில், தன்னை இபாதத்துகளைச் செய்பவர்களாகவும் அல்லாஹ்வின் உரிமைகளைச் செலுத்துபவர்களாகவும் கருதுகின்றோம். ஆனால் இந்த அனைத்து விசயத்திலும் பகட்டு அல்லது காட்டுதல் போன்றவை இருக்குமென்றால் அல்லது நாம் இபாதத்துகளைச் செய்கின்றோம். ஆனால் படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்தவில்லையென்றால், இப்படிப்பட்ட இபாதத்துகளும் இறைவன் மத்தியில் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. மேலும் மனிதன் இபாதத்துகள் செய்வதன் நோக்கமாகிய இறை விருப்பத்தினை பெறக்கூடியதாகவும் இது இருக்காது.

தற்போது நான் மிக நீளமான அறிவிப்பை எடுத்துரைக்க உள்ளேன். இது ஒரு அறிவுரையாகும். இது வஸிய்யத் வடிவில் உள்ளது. இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கு கூறினார்கள். அதனை நான் எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:**

முஆஸ் அவர்களே! நான் உங்களுக்கு ஒரு விசயத்தைக் கூறுவேன். நீங்கள் அதனை மனனம் செய்து கொண்டால் அது உங்களுக்கு பலனளிக்கும். அதனை மறந்து விட்டீர்கள் என்றால் பிறகு உங்களால் அல்லாஹ்வின் அருளைப் பெற முடியாது. மேலும் உங்களிடம் ஈடேற்றம் பெறுவதைக் குறித்து நிம்மதியாக இருப்பதற்கு எவ்வித சான்றும் இருக்காது.

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

முஆஸ் அவர்களே! அல்லாஹ் வானத்தையும் பூமியையும் படைப்பதற்கு முன்பு ஏழு காவலாளி வானவர்களைப் படைத்தான். அதாவது ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு ஏழு தர்ஜாக்கள் உள்ளன. அதன் அடிப்படையில் மனிதன் அதனை அடைகின்றான். இந்த வானவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வானத்திலும் காவலாளியாக நியமித்தான். இவர்களது பணி என்னவென்றால், இவர்கள் தத்தமது இடத்திலேயே இருக்க வேண்டும். மேலும் யாருடைய அமல்கள் இங்கிருந்து (உள்ளே) செல்வதற்கு நாம் அனுமதி கொடுத்துள்ளோமோ அந்த அமல்களை மட்டும் செல்ல விட வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

மனிதர்களின் செயல்களைப் பாதுகாக்கக்கூடிய, மனிதர்களின் தினசரி செயல்பாடுகளை எழுதக்கூடிய அந்த வானவர்கள், ஒரு மனிதனின் காலையிலிருந்து மாலை வரை செய்த அமல்களை எடுத்துக் கொண்டு வானத்தை

நோக்கிச் சென்றனர். மேலும் இந்த அமல்களை அந்த வானவர்கள் தூய்மையானதாகக் கருதினார்கள். மிகவும் நல்ல அமல்கள் எனவும், இந்த அமல்களை மிக அதிகம் எனவும் கருதினர். ஆனால் அந்த அமல்களை எடுத்துக் கொண்டு முதல் வானத்திற்குச் சென்று அங்குள்ள காவலாளி வானவரிடம், நாங்கள் இறைவனிடம் ஒரு மனிதனுடைய அமல்களைச் சமர்ப்பிக்க வந்துள்ளோம். இந்த அமல்கள் மிகவும் தூய்மையானவை என்றனர். அதற்கு அந்த வானவர், நில்லுங்கள்! உங்களுக்கு தொடர்ந்து செல்வதற்கு அனுமதி இல்லை. நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். மேலும் இது எந்த மனிதருடைய அமல்களோ இதனை அவரது முகத்தில் எறியுங்கள் என்று காவலாளி வானவர் கூறினார். இறைவன் என்னிடம், **புறம் பேசுபவனது** அமல்களை இந்த வாசல் வழியாகச் செல்ல விடக்கூடாது என கட்டளையிட்டு என்னை இங்கு நிறுத்தியுள்ளான். மேலும் நீங்கள் எந்த மனிதருடைய அமல்களை இறைவனிடம் சமர்ப்பிக்க வந்துள்ளீர்களோ அவர் எந்நேரமும் புறம் பேசிக் கொண்டு தான் இருக்கிறார். மக்களுக்குப் பின்னால் இவர் பேசிக் கொண்டிருக்கிறார் என்று அந்த வானவர் கூறினார்.

**அடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வேறு சில வானவர்கள், வேறொரு அடியானுடைய அமல்களை எடுத்துக் கொணடு வானத்திற்குச் சென்றார்கள். அவர்கள் தமக்கிடையில் இந்த அமல்கள் மிகவும் பரிசுத்தமானதாகும். இந்த அடியார் இந்த அமல்களை மிகவும் அதிகமாக செய்து வருகின்றார் என பேசிக் கொண்டிருந்தனர். மேலும் இதில் புறம் பேசியதற்கான எந்த அடையாளமும் இல்லாததால் முதல் வானத்திலிருந்த காவலாளி வானவர் அவரை தொடர்ந்து செல்ல விட்டார். ஆனால் அவர்கள் இரண்டாவது வானத்திற்குச் சென்ற போது அங்குள்ள காவலாளி வானவர் இவர்களை அழைத்தார். நில்லுங்கள்! திரும்பிச் செல்லுங்கள். இந்த அமல்களை இதனை செய்தவருடைய முகத்தில் எறியுங்கள் என்றார். மேலும் வானவர், நான் தற்பெருமை மற்றும் பெருமையடிப்பதனை கண்காணிக்கக்கூடிய வானவர் ஆவேன். இறைவன் என்னை இங்கு எதற்காக நியமித்துள்ளான் என்றால், நான் **தற்பெருமை மற்றும் பெருமையில்** பங்குகொண்டுள்ள மனிதரின் எந்த அமல்களையும் இங்கேயிருந்து செல்ல விடக் கூடாது என்பதற்காக நியமித்துள்ளான். அவர் கூட்டங்களில் அமர்ந்து தான் செய்த நன்மைகளை பெருமையுடன் எடுத்துக் கூறுபவர் ஆவார். எனவே நீங்கள் எந்த மனிதருடைய அமல்களை எடுத்து வந்துள்ளீர்களோ அவர் மக்களின் கூட்டங்களில் அமர்ந்து தனது இந்த அமல்களைக் குறித்து பெருமையடிப்பவர் ஆவார் என்று கூறினார்.

**அடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வானவர்களது வேறொரு கூட்டம் வேறொரு மனிதருடைய அமல்களை எடுத்துக் கொண்டு வானத்தை நோக்கிச் சென்றனர். அது இந்த வானவர்களது பார்வையில் முழுமையான ஒளியாக இருந்தது. அதாவது மிகவும் பிரகாசமான அமல்களாக அவை இருந்தன. இந்த அமல்களில் ஸதக்காவும் இருந்தது; நோன்பும் இருந்தது; தொழுகைகளும் இருந்தன. அந்த பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்ட வானவர்கள், இவர் எவ்வாறெல்லாம் தனது இறைவனின் விருப்பத்திற்காக உழைக்கிறார் என ஆச்சரியப்பட்டார்கள். மேலும் இந்த அமல்களில் புறம் பேசுவதற்கான பங்கும் இல்லை. தற்பெருமை கொண்டதற்கான பங்கும் இல்லை. எனவே முதல் மற்றும் இரண்டாவது வானத்திலிருந்த வானவர்கள் அவர்களைக் கடந்து செல்ல விட்டனர்.

ஆனால் அவர்கள் மூன்றாவது வானத்தின் வாசலருகே சென்ற போது, அங்கிருந்த காவலாளி வானவர் நில்லுங்கள் என்றார்.

அதாவது நீங்கள் எந்த மனிதருடைய அமல்களை இறைவனிடம் கொண்டு செல்கின்றீர்களோ அதனை அவரிடமே திரும்பக் கொண்டு செல்லுங்கள். அவரது அமல்களை அவரது முகத்தில் எறியுங்கள் என்று கூறினார். நான் **ஆணவத்தை** கண்காணிக்கக்கூடிய வானவர் ஆவேன் என்றார். என்னை இறைவன் மூன்றாவது வானத்தின் வாசலில் இதனைக் கூறி நிறுத்தியுள்ளான். அதாவது இந்த வாசல் வழியாக ஆணவத்தின் பங்கைக் கொண்டுள்ள எந்தவொரு அமலும் செல்லக் கூடாது. மேலும் நீங்கள் எந்த மனிதருடைய அமல்களைக் கொண்டு வந்துள்ளீர்களோ இவர் ஒரு மிகப்பெரிய ஆணவம் கொண்டவராவார். அவர் தன்னைத் தானே எல்லாம் எனக் கருதி வந்தார். மற்றவர்களை ஏளனத்துடன் பார்த்து வந்தார். மேலும் அவர்களுடன் ஆணவத்துடன் நடந்து கொண்டார். அவர் தனது கூட்டங்களில் தலையை நிமிர்த்தி உட்காரக் கூடியவராவார். இவருடைய அமல் தான் உங்களது பார்வையில் நல்லவையாகத் தெரிகின்றன. ஆனால் அவை இறைவனது பார்வையில் ஏற்கத்தக்கதல்ல.

**அடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நான்காவது ஒரு கூட்டம் இன்னொரு மனிதருடைய அமல்களை எடுத்துக் கொண்டு வானத்தை நோக்கிச் சென்றனர். அந்த அமல்கள் இந்த வானவர்களுக்கு பிரகாசமான நட்சத்திரங்களாகத் தென்பட்டன. அதில் தொழுகைகளும் இருந்தன; தஸ்பீஹும் இருந்தது; ஹஜ்ஜும் இருந்தது; உம்ராவும் இருந்தது; அந்த வானவர்கள்

இந்த அமல்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வானமாக ஒவ்வொரு வாசலாகக் கடந்து நான்காவது வானத்தற்குச் சென்றடைந்தார்கள். அங்கிருந்த காவலாளி வானவர் நில்லுங்கள் என்றார். நீங்கள் இந்த அமல்களை இதனைச் செய்து வந்தவரிடம் திரும்பக் கொண்டு செல்லுங்கள். இதை அவரது முகத்தில் எறியுங்கள் என்றார்.

அந்த வானவர் நான் **தற்புகழ்ச்சியைக்** கண்காணிக்கும் வானவர் ஆவேன் என்றார். அல்லாஹ் எந்த மனிதரிடத்தில் தற்புகழ்ச்சி இருக்குமோ மேலும் அவர் தன்னை இறைவனுக்கு இணையாக நினைத்தாலோ, அவரிடம் சுயநலத்தன்மை காணப்பட்டாலோ மேலும் அவரிடம் இறை அடியான் ஆவதற்குரிய நிலை தென்படவில்லை என்றால் அவருடைய அமல்களை இந்த நான்காவது வானத்தின் வாசல் வழியாக செல்லவிடக் கூடாது என எனக்கு கட்டளையிட்டுள்ளான். இது எனது இறைவனது கட்டளையாகும். இந்த மனிதர் ஏதாவது வேலை செய்தால் அதில் தற்புகழ்ச்சியை ஒரு பங்காக வைக்கிறார். அவரது அமல்கள் இறைவனது பார்வையில் ஏற்கத்தக்கதல்ல.

**அடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வானவர்களுடைய ஐந்தாவது கூட்டம் இன்னொரு மனிதருடைய அமல்களை எடுத்துக் கொண்டு வானத்தை நோக்கிச் சென்றன. இந்த அமல்களைக் குறித்து இந்த வானவர்கள் அதாவது அலங்கரிக்கப்பட்ட நறுமணம் வீசக்கூடிய மாப்பிள்ளையிடம் காட்டக்கூடிய ஒரு மணப்பெண்ணைப் போன்றாக இருந்தது. ஆனால் அவர்கள் நான்கு வானங்களையும் தாண்டி ஐந்தாவது வானத்தை அடைந்ததும் அதன் காவலாளி வானவர் நில்லுங்கள் என்றார். இந்த அமல்களை திரும்ப எடுத்துச் செல்லுங்கள். அவரது முகத்தில் எறியுங்கள். மேலும் அவரிடம் உங்களது இறைவன் இந்த அமல்களை ஏற்கத் தயாராக இல்லை. ஏனென்றால் நான் பொறாமையைக் கண்காணிக்கக்கூடிய வானவர் ஆவேன். எனது இறைவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே பொறாமை கொள்ளும் பழக்கத்தைக் கொண்ட ஒவ்வொருவருடைய அமலும் ஐந்தாவது வானத்தின் வாசல் வழியாக செல்லவிட மாட்டேன். இவர் அறிவை கற்கக்கூடிய ஒவ்வொருவர் மீதும் பொறாமை கொண்டு வந்தார். நான் இவரது அமல்களை இந்த வாசல் வழியாக செல்லவிடமாட்டேன். ஏதாவது ஒரு ஆலிமை பார்த்தாலோ ஏதாவது நல்ல அமல்கள் செய்யக்கூடியவரைக் கண்டாலோ இவர் பொறாமை கொண்டு வந்தார். எனவே இந்த வழியாக இவர் ஒருபோதும் செல்ல முடியாது.

**அடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வானவர்களுடைய ஆறாவது கூட்டம் இன்னொரு அடியாருடைய அமல்களை எடுத்துக் கொண்டு வானத்தை நோக்கிச் சென்றன. முதல் ஐந்து வாசல்களைக் கடந்து ஆறாவது வானத்தைச் சென்றடைந்தனர். இந்த அமல்கள் எப்படிப்பட்டதென்றால் இதில் நோன்பும் இருந்தது; தொழுகையும் இருந்தது; ஸக்காத்தும் இருந்தது; ஹஜ் மற்றும் உம்ராவும் இருந்தன. மேலும் வானவர்கள் இந்த அமல்கள் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியது எனக் கருதினர். ஆனால் அவர்கள் ஆறாவது வானத்திற்குச் சென்ற போது, அங்கிருந்த காவலாளி வானவர் நில்லுங்கள் என்றார். முன்னால் போகாதீர்கள்.

அதாவது இந்த மனிதர் இறை அடியார்கள் எவர் மீதும் கருணை புரிந்ததே இல்லை. இறைவன் இங்கு என்னை எந்த அமல்களில் **கருணையின் குறைபாடு** இருக்குமோ அதனை இந்த வாசல் வழியாக செல்லவிடக்கூடாது என்பதற்காகத்தான் நிறுத்தி இருக்கின்றான். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். மேலும் இந்த அமல்களை அந்த மனிதர் முகத்தில் இதனைக் கூறியவாறு எறியுங்கள். அதாவது நீ உமது வாழ்வில், இறை அடியார்கள் மீது கருணை புரிவதற்குப் பதிலாக அநீதியிழைத்துள்ளீர். இறைவன் உம்மீது கருணை காட்டியவாறு உமது அமல்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வான். நீர் கருணை புரியவில்லை என்றால் அல்லாஹ்வும் கருணை புரியமாட்டான்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

மேலும் சில வானவர்கள் ஒரு மனிதனுடைய அமல்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வானமாகக் கடந்து, ஒவ்வொரு வாசலாகக் கடந்து ஏழாவது வானத்திற்குச் சென்றனர். இந்த அமல்களில் தொழுகையும் இருந்தது. நோன்பும் இருந்தது. ஃபிக்கா மற்றும் இஜ்திஹாதும் இருந்தது. தீமையிலிருந்து தவிர்ந்திருத்தலும் இருந்தது. அதாவது இந்த அமல்களிலிருந்து தேனீக்களின் ரீங்காரம் போன்று சப்தம் வந்தது. அதாவது வானவர்கள் முணுமுணுத்தவாறு நாம் மிகவும் நல்ல ஒரு பொருளை இறைவனுக்கு சமர்ப்பிக்கச் செல்கிறோம் எனக் கூறிக் கொண்டிருந்தனர். மேலும் அந்த அமல்கள் சூரியனின் ஒளியைப் போன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்களுடன் 3000 வானவர்களும் இருந்தனர். அதாவது அந்த அமல்கள் எந்த அளவு எடை கொண்டதாக இருந்தது என்றால் 3000 வானவர்கள் அவரது கணக்கு நூலைச் சுமந்து கொண்டிருந்தனர். வானவர்கள் ஏழாவது வானத்தின் வாசலருகே சென்ற போது, அங்குள்ள நியமிக்கப்பட்டிருந்த காவலாளி வானவர் நில்லுங்கள்! நீங்கள் முன்னே செல்ல முடியாது எனக் கூறினார். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். மேலும் இதனை அந்த மனிதருடைய

முகத்தில் எறியுங்கள். அவரது உள்ளத்தில் பூட்டு போடுங்கள். ஏனென்றால் இறைவன் எனக்கு, நான் அவன் முன்பு தூய்மையான ரீதியில் இறை விருப்பத்தைத் தேடாத மனிதருடைய அமல்களைக் கொண்டு செல்ல விடக்கூடாது எனக் கட்டளையிட்டுள்ளான். இந்த மனிதர் இந்த அமல்களை இறைவனுக்காக அல்லாமல் மற்றவர்களுக்காக செய்துள்ளான். இவர் சட்ட அறிஞர்களின் கூட்டங்களில் உட்கார்ந்து தற்பெருமையினால் தனது தலையை உயர்த்திக் கொண்டு ஃபிக்கா மற்றும் சட்டவியல் சம்பந்தமான விசயங்களைக் கூறி வந்தார். இதன் மூலம் அந்த அறிஞர்கள் மத்தியில் உயர்ந்த கண்ணியம் கிடைக்க வேண்டும் என விரும்பினார். எனவே அவர் இந்த அமல்களை எனது விருப்பத்திற்காகச் செய்யவில்லை. மாறாக தனது கண்ணியத்திற்காக மட்டுமே செய்துள்ளார். இதன் மூலம் மிகப்பெரிய நபர் என்று உலகம் பேச வேண்டும் என்றும், உலமாக்களின் மஜ்லிஸ்களில் இவரைப் பற்றி பேசப்பட வேண்டும் என்பதற்காகவே ஆகும். இறைவனுக்காக மட்டும் செய்யப்படாத செயல்கள் மற்றும் அதில் காட்டுதல் இணைந்திருக்கும் என்றால் அது இறைவனிடத்தில் ஏற்கத்தக்கதல்ல. எனக்கு இப்படிப்பட்ட அமல்களை முன்னே செல்லவிடக் கூடாது என எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்று வானவர் கூறினார். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். இந்த அமல்களை அவரது முகத்தில் எறியுங்கள் என்று கூறினார்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வேறு சில வானவர்கள் ஒரு மனிதருடைய அமல்களை எடுத்துக் கொண்டு வானங்களின் பக்கம் சென்றனர். ஏழாவது வானத்தின் காவலாளி அவரை கடந்து செல்ல விட்டார். அவருக்கு இந்த அமல்கள் மீது எந்த ஆட்சேபனையும் இருக்கவில்லை. ஒவ்வொரு வானத்திலும் இருந்த காவலாளி வானவர்கள் இவரது அமல்கள் சரியெனக் கூறினர். வெளிப்படையில் எல்லாம் சரியாக இருக்கிறது என்றவாறு கடந்து செல்ல விட்டனர். இந்த அமலில் ஸக்காத்தும் இருந்தது; நோன்பும் இருந்தது; தொழுகையும் இருந்தது; ஹஜ்ஜும் இருந்தது; உம்ராவும் இருந்தது. சிறந்த நல்லொழுக்கமும் இருந்தன. திக்ரே இலாஹியும் இருந்தது. வானவர்கள் இந்த அமல்களை எடுத்துக் கொண்டு இறைவனிடம் சமர்ப்பிக்கச் சென்ற போது வானத்தின் ஏனைய வானவர்கள் அவர்களுடன்இணைந்து கொண்டனர். அவர்கள் அனைத்து வாசல்களையும் கடந்து இறைசன்னதியை அடைந்தனர். அந்த வானவர்கள் இறைவன் முன்பு நின்று, எங்கள் இறைவா! உன்னுடைய இந்த அடியார் எந்நேரமும் இபாதத்துகளிலேயே மூழ்கியிருக்கிறார். நாங்கள் இவரது ஒவ்வொரு நல்ல அமல்களுக்கும், தூய்மைக்கும் சாட்சி பகர்கின்றோம். இவர் அதிகமாக நன்மை செய்பவர் ஆவார். தனது விருப்பமான அனைத்து நேரங்களையும் உனக்கு கட்டுப்படுவதிலேயே கழிப்பவராவார். இவர் சிறந்த நல்லடியார் ஆவார். இவரிடம் எந்த குறைவும் இல்லை என்றனர். இவ்வாறு வானவர்கள் இந்த நபரை மிகவும் புகழ்ந்து பேசினர்.

இறைவன் கூறினான்: நான் உங்களது அமல்களைப் பாதுகாக்கவும் அவர்களது நன்மை தீமைகளை எழுதுவதற்காகவும் தான் நியமித்தேன். நீங்கள் மனிதனுடைய வெளிப்படையான அமல்களை மட்டும் பார்க்கின்றீர்கள். அதனை எழுதுகின்றீர்கள். ஆனால் நான் எனது அடியானின் உள்ளத்தைப் பார்க்கின்றேன். இந்த அடியார் இந்த அமல்களைச் செய்து என்னுடைய விருப்பத்தை வேண்டவில்லை. மாறாக இவரது எண்ணமும், நிய்யத்தும் வேறொன்றாக இருந்தது. அவர் என்னைத் தவிர வேறொன்றை மகிழ்ச்சிப்படுத்த விரும்பினார். அவர் மீது எனது சாபம் உண்டாகட்டும் என்று இறைவன் கூறுவான்.

இதனைக் கேட்ட அனைத்து வானவர்களும் அலைஹி லஃனத்துக லஃனத்தனா – அதாவது அவர் மீது உன்னுடைய சாபமும் எங்களுடைய சாபமும் உண்டாகட்டும்! பிறகு இவர் மீது ஏழு வானமும் அதில் இருக்கக்கூடிய படைப்பினங்களும் லஃனத் செய்ய ஆரம்பித்து விட்டன அல்லது லஃனத் செய்ய ஆரம்பித்து விடும்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த அறிவுரையையும், வஸிய்யத்தையும் கேட்டு அவர்களது உள்ளம் நடுங்கியது. அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அமல்களின் நிலை இவ்வாறானதாக இருக்கிறது என்றால், பிறகு இரட்சிப்பு நமக்கு எவ்வாறு கிடைக்கும்? நான் எனது இறைவனின் தண்டனையிலிருந்து எவ்வாறு தவிர்ந்திருக்க முடியும்?

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எனது சுன்னத் எனது நடைமுறையின்படி செயல்படுங்கள். மேலும் அதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

இறைவனுடைய ஒரு அடியான் எவ்வளவு தான் நல்ல அமல்கள் செய்தாலும் அதில் கண்டிப்பாக சில குறைபாடுகள் இருக்கும். எனவே நீங்கள் உங்கள் அமல்கள் மீது பெருமை கொள்ளாதீர்கள். மாறாக நமது இறைவன் நமது எஜமானன், எப்படிப்பட்டவன் என்றால் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தபோதிலும் தனது அடியார்களை மன்னித்து விடுகின்றான்.

உங்களது நாவைக் கட்டுப்படுத்துங்கள். அதன் மூலம் யாருக்கும் கஷ்டம் கொடுக்காதீர்கள். அதிலிருந்து தீமையான எந்த விசயத்தையும் பேசாதீர்கள்.

உங்களை மற்றவர்களை விட சிறந்த இறையச்சமுடையவர் என்றோ, பரிசுத்தமானவன் என்றோ கருதாதீர்கள். அதைப் போன்று உங்களது பரிசுத்தத்தன்மையை அறிவிக்காதீர்கள.

நீங்கள் இறை விருப்பத்தைப் பெறுவதற்காகவும் வாழ்நாள் முழுவதும் பயன் அடைவதற்காக செய்யக்கூடிய அமல்களில் உலகத்தைச் சேர்க்காதீர்கள்.

நீங்கள் மக்கள் மத்தியில் கூச்சல், குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களைப் பிளப்பதற்கு முயற்சி செய்யாதீர்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் மறுமையில் நரகத்தின் நாய்கள் உங்களைப் பிளந்து விடும்.

தனது அமலைக் காட்டுதல் என்பதற்காக மக்கள் முன்பு வெளிப்படுத்தாதீர்கள். இவ்வாறு செய்யாதீர்கள் என்றால் அல்லாஹ்வுடைய அருள் உங்கள் மீது உண்டாகும். உண்மையான நன்மைகள் செய்வதற்கான வாய்ப்பு ஏற்றுக் கொள்ளத்தக்க நன்மைகள் செய்வதற்கான வாய்ப்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரி நம் முன் இருக்கும் போது தான் கிடைக்கும். பெருமானார் (ஸல்) அவர்கள் வெற்றிக்கான நற்செய்தி கிடைத்தும் கூட மிகவும் வேதனையுடன் தனது மற்றும் தனது ஜமாஅத்தின் பலவீனங்களை முன் வைத்து துஆக்கள் செய்து வந்தார்கள். அல்லாஹ் அன்னாரது துஆக்களை ஏற்கவும் செய்திருக்கின்றான். வருங்காலத்திற்கான நற்செய்தியினை கூறியிருந்த போதிலும் மன்றாடியவாறு, நிம்மதியிழந்தவாறு துஆக்களை செய்து வந்தார்கள். இந்த துடிப்பிற்கான காரணம் கேட்கப்பட்ட போது, அன்னார் அல்லாஹ் தன்னிறைவு பெற்றவன் ஆவான். ஒன்று, அவன் மீதுள்ள அச்சம், இரண்டாவது அவன் என் மீது செய்துள்ள அருள்கள். அதற்கு நான் நன்றியுள்ளவனாக விளங்குவதாகும்.

அல்லாஹ் எந்த அளவு அருள்களைப் பொழிந்திருக்கின்றான். மேலும் எந்த அளவு இந்த உம்மத்திற்கு வாக்குறுதிகளை அழித்துள்ளான். இதற்கு நான் ஏன் நன்றியுள்ளவனாக இருக்கக் கூடாது? எனக் கூறினார்கள். ஆக இதுதான் அன்னார் நம்முன் காட்டிச் சென்ற உயர்ந்த முன்மாதிரி ஆகும்.

இறை அடியார்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இருந்தது என்றால் உலக நோக்கங்களை விட்டு விட்டு எந்த வேற்றுமையும் பாராட்டாமல் ஒவ்வொருவருக்கும் அன்னார் உதவி செய்தார்கள். தேவையுடைய ஒவ்வொருவருடைய தேவையையும் பொருள் உதவியும் செய்து வந்தார்கள். ஒவ்வொருவரும் அன்னாருடைய கருணையில் பங்கு பெறுகிறார்கள். ஒவ்வொருவரும் அன்னாரது அன்பிலிருந்து இரக்கத்திலிருந்து பலன் பெறுகின்றனர்.

ஆக, அன்னார் கூறினார்கள்: இவ்வாறு இறைவனுக்கு அஞ்சி, அவனுக்கு நான் இபாதத் செய்வதைப் போன்று நீங்களும் செய்யுங்கள். நான் எவ்வாறு நன்றியுள்ள அடியானாக விளங்குகின்றேனோ அதே போன்று நீங்கள் ஆகுங்கள். மேலும் நான் எவ்வாறு ரஹ்மானுடைய அடியானாக விளங்குகின்றேனோ அதேபோன்று நீங்கள் ஆகுங்கள். மேலும் எவ்வாறு நான் முன்மாதிரியை நிலைநாட்டியிருக்கின்றேனோ நீங்கள் இதன்படி செயல்பட்டால் நீங்களும் அல்லாஹ்வின் அருளைப் பெறக் கூடியவர்களாக ஆகலாம். நான் எவ்வாறு இறை அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்தியிருக்கின்றேனோ இதனைப் போன்று நீங்களும் எனது முன்மாதிரியின்படி செயல்பட்டவாறு சுயநலமில்லாமல், தன்னலமில்லாமல் இறை அடியார்களின் உரிமையைச் செலுத்தினால் பிறகு அல்லாஹ்வின் அருளைப் பெறக் கூடியவர்களாக ஆகி விடுவீர்கள். நான் அதிக அளவு நன்மை செய்கின்றேன் என பெருமை பாராட்டி தனது நன்மைகளே போதும் என்று தனது இபாதத்துகளே போதும் என்று கருதினால் அல்லாஹ்வின் அருளைப் பெற முடியாது.

ஆக, சுன்னத்தின்படி செயல்படுவதற்கு அன்னாரது முன்மாதிரியின்படி செயல்படுவதற்கு தன்னை ஆராய வேண்டிய அவசியம் நமக்கு இருக்கின்றது. இறைவன் முன்பு குனிந்தவாறு அவனது அருளை வேண்ட வேண்டும். இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கக்கூடிய அந்த அமல் நமது எந்த அமல் மூலம் நிறைவேறப் போகிறது என்பது நமக்கு தெரியாது.

ஆக, நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமது அமல்களை அவனது விருப்பத்திற்கேற்ப ஆக்குவானாக! மேலும் தனது அருளால் மட்டும் அதனை ஏற்றுக் கொள்வானாக! நமது அமல்கள் உலகக் கலப்படத்தின் காரணமாக நமது முகத்திலேயே எறியப்படக்கூடியதாக இருக்கக் கூடாது. நாம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். அதாவது நாம் இவ்வுலகிலும் இறைவனது சொர்க்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும். நமது ஒவ்வொரு அமலையும் அவனது விருப்பத்திற்கேற்ப அமைத்து இவ்வுலகிலும் இறையருளைப் பெறக் கூடியவர்களாக வேண்டும். வரக்கூடிய வாழ்விலும் அல்லாஹ்வின் சொர்க்கத்திற்கு வாரிசாக வேண்டும். அல்லாஹ் தனது அருளால் நமது இந்த துஆக்களை ஏற்றுக் கொள்வானாக!

தற்போது நான் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா தொழுகைகளைத் தொழ வைப்பேன். இவைகள் காயிப் ஜனாஸா ஆகும். ஒன்று சஹீதுடைய ஜனாஸா ஆகும். மற்ற இரண்டும் மரணித்தவர்கள் ஆவார்கள்.

நமது சஹீது, கண்ணியத்திற்குரிய இஜாஸ் அஹ்மது கியானி சாஹிப் ஆவார்கள். இவரது தந்தையார் கண்ணியத்திற்குரிய பஷீர் அஹ்மது கியானி சாஹிப் வாரங்கி டவுண் கராச்சியைச் சேர்ந்தவர் ஆவார். இவர் செப்டம்பர் 18ம் தேதி சஹீதாக்கப்பட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரை வாரங்கி டவுணில் அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டு சஹீதாக்கியிருக்கிறார்கள். கிடைத்த தகவலின்படி கண்ணியத்திற்குரிய இஜாஸ் அஹ்மது கியானி சாஹிப் செப்டம்பர் 18ம் தேதி காலை 7.30 மணியளவில் வீட்டிலிருந்து பணிக்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்தார்கள். சிறிது தூரம் தான் சென்றிருந்தார்கள். பார்த்தவர்களின் கூறுவதன் அடிப்படையில் ஒரு வேகத்தடையில் மோட்டார் சைக்கிளின் வேகம் குறைந்த போது, இரண்டு மோட்டார் சைக்கிளின் வந்தவர்கள் அவரது அருகில் வந்தனர். இருமுறை அவரது இடது விலா எலும்பின் பக்கம் சுட்டார்கள். இதனால் அவர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்துள்ளார். கீழே விழுந்த பிறகு எழுவதற்கு முயற்சி செய்துள்ளார். அப்போது தாக்குதல் நடத்தியவர்கள் முன்பக்கமாக வந்து சுட்டுள்ளனர். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இடது கையை முன்னால் நீட்டி இருக்கிறார். அப்போது தாக்குதல் நடத்தியவர்கள் அவரது கையில் சுட்டுள்ளனர். பிறகு அவரது மார்பில் மூன்று முறை சுட்டுள்ளனர். அவர் கீழே விழுந்தவுடன் பின்புறமாக இருந்து ஒருமுறை அவரது தலையின் பின்புறத்தில் சுட்டுள்ளனர். இதனால் அவர் அதிக காயங்களுடன் சம்பவ இடத்திலேயே சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

கடந்த மாதம் ஆகஸ்டு 21ம் தேதி இவரது சகோதரியின் கணவர் கண்ணியத்திற்குரிய ஸகூர் அஹ்மது கியானி சாஹிபையும் இந்தப் பகுதியில் தான் சஹீதாக்கினார்கள். கண்ணியத்திற்குரிய இஜாஸ் அஹ்மது கியானி சாஹிபின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது தந்தையின் இரண்டு சிறிய தந்தைகள் மூலம் கண்ணியத்திற்குரிய முஹம்மது யூசுஃப் கியானி சாஹிப் மற்றும் கண்ணியத்திற்குரிய முஹம்மது ஸயீது கியானி சாஹிப் மூலம் மலர்ந்தது. இவர்கள் இருவரும் 1936 ஆம் ஆண்டு பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தனர். இவரது தந்தையின் இரண்டு சிறிய தந்தைகளும் மிகவும் அறிவு படைத்தவர்கள் ஆவார்கள். அவர்கள் நூல்களைப் படித்த பின்பே பைஅத் செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றார்கள்.

சஹீது மர்ஹூமுடைய குடும்பம் பிரேம்கோட், முஸாஃபராபாத் ஆஸாத் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள் ஆவர். சஹீது மர்ஹூம் டிசம்பர் 1ம் தேதி 1984 -ல் கராச்சியில் பிறந்தார்கள். கராச்சியிலேயே இன்டர் வரை கல்வி பயின்றார்கள். ஐந்து வருடத்திற்கு முன்பு பாகிஸ்தானின் மிலிட்டரி அர்டினன்ஸில் சிவிலியன் டிரைவர் ஆக பணியாற்றியுள்ளார்கள். சஹீதாகும் போது இவரது வயது 29 ஆகும். 2009 -ல் இவரது திருமணம் சோபியா சாஹிபாவுடன் நடைபெற்றது. இவர் காஷ்மீரைச் சேர்ந்த ராஜா அப்துர் ரஹ்மான் சாஹிப் கோட்லி உடைய மகள் ஆவார். சஹீது மர்ஹூம் தூய்மையான சமாதானத்தை விரும்பக்கூடிய மென்மையான அமைதியான இயல்பைக் கொண்ட மனிதர் ஆவார். ஜமாஅத்தின் தொண்டுகள் தொடர்பாக எப்போதும் உதவி செய்து வந்துள்ளார். ஏதாவது டியூட்டியிற்காக அழைக்கப்பட்டால் கட்டுப்படுதலை வெளிப்படுத்தியுள்ளார்.

இவரது சகோதரர் கண்ணியத்திற்குரிய மிஜாஜ் அஹ்மது கியானி சாஹிப் கூறுகின்றார்கள்: சஹாதத் சம்பவம் நடப்பதற்கு ஒருநாள் முன்பு தனது சகோதரியின் கணவர் ஸகூர் அஹ்மது கியானி சாஹிபைப் பற்றி பேசிக் கொண்டிருந்த சமயத்தில் இவர் அழுது விட்டார். இவர் ஸகூர் அஹ்மது கியானிக்கு மிகவும் கண்ணியமளித்து வந்தார். மூத்த சகோதரருக்குரிய தந்தைக்குரிய கண்ணியத்தை அளித்து வந்தார். அவரது சஹாதத்திற்குப் பிறகு குடும்பத்தினரிடம் சென்று பிள்ளைகளைக் குறித்து நலம் விசரிக்காத நாளே இல்லை. அவரது சஹாதத் இவரிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சஹீது மர்ஹூமுடைய தாயார் கூறினார்கள்: நான்கு சகோதரிகளுக்குப் பிறகு பல துஆக்களுடன் இந்த மகனை இறைவன் எனக்கு வழங்கினான். இவர் மிகவும் சிந்தித்து தான் பேசுவார். என்னுடன் அன்பு மற்றும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். டியூட்டிக்கு செல்லும் போது கை குலுக்கி விட்டு குதா ஹாஃபிஸ் இறைவன் பாதுகாவலன் என்று கூறி விட்டுச் செல்வார். எனது மருந்துகளைக் குறிப்பாக கவனித்து வந்தார். சகோதரிகளை ஒரு மூத்த சகோதரனைப் போன்று கவனித்து வந்தார். மிகவும் மென்மையான உள்ளம் கொண்டவர் ஆவார். ஏதாவது ஒரு பொருள் வீட்டிற்கு வாங்கிக் கொண்டு வந்தால் அதனை அனைவருக்கும் கொடுக்க ஆசைப்படுவார்.

இவரது மனைவி கூறுகின்றார்: சஹீது மர்ஹூம் மிகவும் நல்ல இயல்புகளுக்குச் சொந்தக்காரர் ஆவார். ஒவ்வொருவருடைய கடமையையும் செலுத்தி வந்தார். நல்ல மகன், நல்ல சகோதரர், நல்ல அப்பா, நல்ல கணவனும் ஆவார். எப்போதாவது கஷ்டம் ஏற்பட்டால் ஆறுதல் வழங்குவார்கள். அல்லாஹ்வின் பக்கம் கவனமூட்டுவார்கள். பிள்ளைகளுடன் மிகவும் இரக்கத்துடன் நடப்பவராவார். கடந்த மாதம் சஹீதான இவரது சகோதரியின் கணவர் சஹீதான போது அந்தோ! நான் இவரது இடத்தில் இருந்திருக்க வேண்டுமே! எனத் திரும்பத் திரும்பக் கூறி வந்தார்.

சஹீது மர்ஹூமின் பிரிவால் வாடுபவர்களில் பெற்றோர்களைத் தவிர மனைவி, 4 வயதுடைய மகன் துர்ரே அதன் இஜாஸ் மற்றும் ஒன்றரை வயது மகன் ஃபுர்ஹான் அஹ்மது உள்ளனர்.

கராச்சியில் இந்த வகையில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. குறிப்பாக அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கென்று ஒரு கூட்டம் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அல்லாஹ் இவர்களை மிக விரைவில் பிடிப்பானாக! உண்மையில் மவ்லவிமார்களும் அவர்களைப் பின்பற்றக் கூடியவர்களும் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இவ்வனைத்தையும் நடத்துகின்றனர். அல்லாஹ் இந்த அநீதியிழைக்கக் கூடிய கூட்டத்தையும் மிகவும் விரைவில் பிடிப்பானாக! துஆக்கள் செய்ய வேண்டிய தேவை அதிகம் உள்ளது. குறிப்பாக கராச்சியில் இந்த நிலை உள்ளது. மேலும் பொதுவாக பாகிஸ்தானிலும் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. லாஹூரிலும் இதனைப் போன்று தான் உள்ளது.

பல இடங்களில் பல அஹ்மதிகளை ஆள் கடத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

இதனுடன் சேர்த்து தொழ வைக்கப்படும் இரண்டாவது ஜனாஸா அப்துல் மூஃமின் சாஹிப் தர்வேஷ் அவர்களுடையதாகும். இவரது தந்தை கண்ணியத்திற்குரிய அல்லாஹ் தத்தா சாஹிப் ஆவார்கள். இவர் காதியானின் தர்வேஷ் ஆவார்கள். செப்டம்பர் 11ம் தேதி சிறிது காலம் உடல்நலம் குன்றியிருந்த பிறகு 97 வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் 1916 -ல் ஜிந்தில் பிறந்தார். பிறகு ஜண்டாவாலா ஃபைஸ்லாபாத்தில் தான் வளர்ந்தார்கள். அங்கு தான் கல்வி அறிவு பெற்றார்கள். ஏறக்குறைய 1945 -ல் மார்க்க அறிவைப் பெறுவதற்காக காதியான் வந்தார்கள். அங்கு தான் முதல் திருமணமும் நடைபெற்றது. பிரிவினையின் காரணமாக அது நிலைபெறவில்லை. அவர்கள் மூலம் எந்த சந்ததியும் கிடைக்கவில்லை. பிறகு இரண்டாவது திருமணம் தர்வேஷ் காலத்தில் ஒடிசாவில் கண்ணியத்திற்குரிய வஸிஹுத்தீன் சாஹிப் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். இவரது பேத்தி கண்ணியத்திற்குரிய மர்ஹூம் ஸையத் முஹையுத்தீன் சாஹிபுடை மூத்த மகள் அமத்துல்லாஹ் ஹமீதா சாஹிபாவுடன் நடைபெற்றது. இவர் மூலம் 8 பிள்ளைகள் பிறந்தன. 5 மகள்களும், 3 மகன்களும் பிறந்தன. இவரது 5 மகன்களும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தனது தர்வேஷ் காலத்தை மிகவம் சாதாரணமாகவும் மிகவும் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் கழித்து வந்தார்கள். வியாபாரம் மற்றும் பல தொழில்களைச் செய்து வாழ்வைக் கழித்து வந்தார். பார்வையாளர் அலுவலகத்தில் தொண்டாற்றி வந்தார்கள். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மிகவும் ஆர்வத்துடன் தப்லீக் செய்து வருவார்கள். கிராமப்புற முபல்லிக் என்ற ரீதியிலும் தொண்டாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்கள். இந்த காலத்தில் அதீப் பாஸில் என்ற பட்டத்தையும் பெற்றார். தொழுகை, நோன்பு போன்றவற்றைப் பின்பற்றக்கூடிய தூய விசுவாசமான மனிதர் ஆவார். பலவீனம் இருந்தும் கூட கடைசி காலத்திலும் கூட ஜமாஅத்தாக நின்று தான் தொழுது வந்துள்ளார்கள். திருக்குர்ஆனுடன் அதிக அளவு அன்பு இருந்தது. தொடர்ந்து ஓதி வரக்கூடியவர் ஆவார். மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்.

மூன்றாவது ஜனாஸா சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபுடையதாகும். சிறிது காலம் உடல்நலக் குறைவிற்குப் பின்னர் செப்டம்பர் 12ம் தேதி 94 வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் 1943-ல் 24வது வயதில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆரம்பத்தில் டில்லியில் அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றினார்கள். பிறகு 1940 -ல் லாஹூர்; அதற்கு ஒரு வருடத்திற்குப் பிறகு கராச்சிக்கு இடம்பெயர்ந்தார்கள். அங்கு சவுத்ரி சாஹ் நவான் சாஹிபுடன் ஒரு வியாபாரம் தொடங்கினார்கள். இவர்கள் தங்குவதற்கு இடமில்லாமல் இருந்தது. அலுவலகத்திலேயே தங்கி வந்தார்கள். 1950 -ல் சவுத்ரி சாஹ் நவான் சாஹிபின் உதவியுடன் சுய தொழிலை ஆரம்பித்தார்கள். இதில் அல்லாஹ் அதிகமான அருள்களை வழங்கினான். உலகக்கல்வி மெட்ரிக் வரை மட்டுமே படித்திருந்தார்கள். ஆனால் வெளிப்படையில் நன்கு படித்தவர் போன்று தோன்றினார். இவர் நன்கு கல்வியறிவு பெற்றவர் என ஒவ்வொருவரும் நினைத்தனர். 1950 -ல் கராச்சியின் துணை அமீராக நியமிக்கப்பட்டார். 1953 -ல் ஏற்பட்ட கிளர்ச்சியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் தற்காலிகமாக சவுத்ரி அப்துல்லாஹ் சாஹிபின் இடத்தில் கராச்சியின் அமீர் ஜமாஅத்தாக நியமிக்கப்பட்டார்கள். அப்போது சவுத்ரி அப்துல்லாஹ் சாஹிப் அரசாங்க ஊழியராக இருந்தார்கள். அவர்களை இந்தப் பணியிலிருந்து காலி செய்வதற்கான வாய்ப்பும் இருந்தது. அதன் பின்னர் சவுத்ரி சாஹிபிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட போது கராச்சியின் அமீர் ஜமாஅத்தாகப் பணியாற்றி வந்தார்கள். 1964 வரை இந்தப் பணியில் நிலைபெற்றிருந்தார்கள். 1953 -ல் கராச்சியின் வரலாறு எழுதப்பட்டதில் இதுவும் எழுதப்பட்டுள்ளது.

1953 –ல் நடைபெற்ற கிளர்ச்சியின் போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கராச்சியில் தனியாக ஒரு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா நிறுவினார்கள். அதற்கு இவர்களைத் தான் நாஸிர் ஆலாவாக நியமித்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நீண்ட நாள் உடல்நலக் குறைவு ஏற்பட்ட காலத்தின் போது கண்காணிப்புப் போர்டுவில் இவரும் உறுப்பினராக இருந்து வந்தார்கள். கிலாஃபத்துடன் விசுவாசமுள்ள சுத்தமாக பேசக்கூடிய, நம்பிக்கைக்குரிய துஆக்கள் அதிகமாக செய்யக்கூடிய, பொருள் தியாகம் செய்யக்கூடிய மனிதர் ஆவார். கருணை உள்ளம் கொண்ட தூய மனிதர் ஆவார்.

கிலாஃபத்துடன் தொடர்பு மிகவும் வலுவானதாக இருந்தது. நான் கலீஃபாவாக ஆன பிறகு என்னுடன் அதிகமாக தொடர்பு கொண்டிருந்தார். அவர்களுக்கு எப்போதும் கவனம் இருந்து வந்தது. சின்னச்சின்ன கஷ்டங்களையும் உணரக்கூடியவராக இருந்தார். நண்பர்கள், உறவினர்கள், தேவையுடையவர்களுக்கு பொருளாதார உதவியும் செய்து வந்துள்ளார்கள். இவர்களது தொடர்பு வட்டம் மிகவும் விரிந்திருந்தது. நண்பர்களும் அன்பர்களும் உலகில் பரவிக்கிடந்தனர். இந்த தொடர்பின் விசாலம் காரணமாக தப்லீகும் செய்து வந்தார். அல்லாஹ்வின் அருளினால் இவர் வஸிய்யத் செய்தவர் ஆவார்.

இவரது ஒரு மகன் டாக்டர் நஸீம் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மிக நீண்ட காலமாக கிலிவ்ஸின் உடைய சதர் ஆகவும், அமெரிக்காவின் துணை அமீரும் ஆவார்கள். ஜமாஅத் உடைய website ஆகிய alislam.org –ல் சேர்மன் ஆக பணியாற்றுகின்றார்கள். இவரது இரண்டாவது மகன் சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் பைஸலாபாத் உடைய துணை அமீராக தொண்டாற்றுகின்றார்.

இதனைப் போன்று தலைமையகத்துடைய பாகிஸ்தானுடைய சன்னூத் வதிஜாரத் உடைய மசாவரத்தி போர்டின் தலைவர் ஆவார். இவரது ஒரு மகள் ஜமீலா ரஹ்மானி சாஹிபா இங்கும் லஜ்னாவில் தொண்டாற்றி வந்தார்கள். குலாம் ரஹ்மானி சாஹிப் U.K. –வில் மிக நீண்ட காலமாக வஸிய்யத் செயலராக இருந்தார்கள்.

இதனைப் போன்று இவரது சிறிய மகள் நுஸ்ரத் மலக் சாஹிபா. இவர் கொலம்பஸ்ஸின் சதர் லஜ்னாவாகவும், அமெரிக்காவின் East medwestern உடைய சதர் லஜ்னாவாகவும் இருக்கிறார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூமின்களுடைய தர்ஜாவையும் உயர்த்துவானாக! மேலும் வருத்தத்தில் வாடுபவர்களுக்கு பொறுமையை வழங்குவானாக! குறிப்பாக அந்த சஹீதுடைய பெற்றோர்களுக்கு பொறுமையையும் ஆறுதலையும் வழங்குவானாக! அவர்களது வாலிபப் பருவ மகன் சஹீதாகி இருக்கிறார்கள். அல்லாஹ் அவரது சிறிய பிள்ளைகளுக்கு காவலனாகவும் பாதுகாப்பாளனாகவும் இருப்பானாக! மற்றொரு விசயம், இன்சா அல்லாஹ் நான் சில வாரங்கள் சுற்றுப் பயணம் செல்கிறேன். துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த சுற்றுப் பயணத்தை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

## பிழை திருத்தம்

13.09.2013 குத்பாவின் கடைசி பக்கத்தின் மூன்றாவது பாராவின் இரண்டாவது வரியில் **அரசைச்** சேர்ந்த அடியார்களும் என்பதற்குப் பதிலாக **அரபைச்** சேர்ந்த அடியார்களும் என்று திருத்தி வாசிக்குமாறு சகோதரர்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். *– வெளியீட்டாளர்.*

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at **BAIT-UL-FUTUH Mosque,** London
on **20.09.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456